DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.98/2023**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரன் | | : |
| த/பெ | : ரெட்டியப்பன் | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : கட்டிட வேலை |
| வட்டம் | : சென்னை | வயது | : 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 11.02.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: Pw1**

எனது மாத செலவுகள் போக எவ்வளவு சேமிப்பு தொகை இருக்கும் என்றால் கட்டிட வேலை பொறுத்து சேமிப்பு தொகை ரூ.1,00,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.10,000/- இருக்கும். சேமிப்பு தொகை ரொக்க பணமாக தான் கையிருப்பில் வைப்பேன். மேற்படி சேமிப்பு தொகை கையிருப்பில் இருப்பதற்கு ஆவண ஆதாரங்கள் அல்லது சாட்சியம் உள்ளதா என்றால் இல்லை. எதிரியிடம் காசோலை தவிர Pronote வேறு ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். கள்ளிக்குப்பத்தில் புஷ்பா என்பவர் டீக்கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த டீக்கடை எதிரில் எதிரியின் கணவர் Car Mechanic Shop வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலை எதிரி நிரப்பி கொடுத்தாரா அல்லது வெற்றுகாசோலை கொடுத்தாரா என்றால் வெற்று காசோலை தான் கொடுத்தார் அதில் புகார்தாரர் தெரிவித்ததின் பேரில் தான் தேதி நிரப்பினேன். உனக்கு என்ன வேண்டுமோ அதை எழுதி கொள் என்று தெரிவித்தார். என்னுடன் வந்த

நபர் காசோலையில் உள்ள விவரத்தை எழுதி கொடுத்தார். பு.சா.ஆ.2 Deposit Slip உள்ள விவரத்தை யார் எழுதினார் என்றால் வங்கியில் ஒரு நபர் அமர்ந்திருந்தார் அவர் எழுதி கொடுத்தார். காசோலையில் என்ன தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் புகார்தாருக்கு சரியாக தெரியவில்லை என்று கூறியதின் பேரில் ஆவணத்தை நீதிமன்றத்தில் வாங்கி பார்த்ததில் 27.12.2022 என்று எழுதப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பில் காசோலை தேதி 07.12.2022 என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது புகார் மனு பத்தி 8 ல் 07.12.2022 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை கொடுத்ததாக தெரிவிக்கப்படும் தேதியானது காசோலையில் ஒரு தேதியும் புகார் மனுவில் வேறொரு தேதி போடப்பட்டுள்ளது என்றால் எதிரி வெற்று காசோலை கொடுத்தார் நான் சொல்லும் தேதியில் வங்கியில் செலுத்துமாறு கூறியதின் பேரில் நான் வங்கியில் செலுத்தினேன். எதிரியின் கணவருக்கும் கள்ளிகுப்பத்தில் டீக்கடை வைத்துள்ள புஷ்பா இருவரும் அக்கா தம்பி என்றும் அவர்கள் சொத்து பிரச்சனை குறித்து அம்பத்தூர் சார்வு நீதிமன்றத்தில் வழக்குள்ளது அந்த பிரச்சனை தொடர்பாக கொடுத்த வெற்று காசோலை வைத்து புஷ்பாவிற்கு சார்பாக நான் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறாகும். 07.12.2022 ஆம் தேதி கொடுத்த காசோலையை எதற்காக 18.01.2023 அன்று வங்கியில் செலுத்தினேன் அதற்கான காரணம் குறித்து தெரிவித்துள்ளேனா என்றால் ஒவ்வொரு முறையும் போன் மூலம் எதிரியிடம் தொடர்பு கொண்டபோது சொல்லும் போது வங்கியில் செலுத்துமாறு தெரிவித்தார். எதிரியின் அலைப்பேசி எண் பார்க்காமல் சொல்ல தெரியாது, போனில் பதிவு செய்துள்ளேன். எதிரியின் கணவர் இறந்த விவரம் எனக்கு தெரியும். ரூ.4,00,000/– கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை என்னிடம் இருந்ததற்கான

ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நேரடியாக பணம் நான் கொடுத்தேன் அதற்கு சாட்சி இல்லை. வருமான வரி சட்டத்தின் படி ரூ.20,000/- த்திற்கு மேல் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் வங்கி மூலமாக தான் செய்யவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த ஒரு பணபரிவர்த்தனையும் இல்லை என்றும், Jural Relationship எங்களிடையே இல்லை என்றும், எதிரிக்கு எந்த ஒரு சட்டகடப்பாடு இல்லை என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. காசோலையில் ஒரு தேதியும் புகார் மனுவில் வேறொரு தேதி குறிப்பிடப்பட்டுள்ளதால் வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றும், சட்டப்படி காலாவதி ஆகி விட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K